புரட்சிப்
பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • அக்டோபர் (OCTOBER) 29, 2026 • புரட்சி 26 • முழக்கம் (ISSUE) 45 • விலை(PRICE) ரூ.6.00

கூடி மகிழ்ந்த ‘பெரியார் குடும்ப’ விழா!

சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் ‘இது பெரியார் குடும்பம்; கூடி மகிழும் விழா’ எனும் தலைப்பில் குடும்பங்களின் கூடுகை நிகழ்வு அக்டோபர்-20 அன்று நீலாங்கரையில் உள்ள ‘புட்வில்லேஜ்’ உணவக அரங்கில் கலகலப்பாக நடைபெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பத் தோழர்கள் குழந்தைகள் பங்கேற்றனர். குடும்ப உறுப்பினர்களிடையே விளையாட்டுப் போட்டிகள், நடனம், பாடல் என்று மகிழ்ச்சிப் பெருக்குடன் நிகழ்ந்தது.

தவில் கவிஞர் கார்மேகம் குழுவில் இடம்பெற்றுள்ள கிராமிய பாடகர் பரிக்கல் சுரேஷ் கிராமியப் பாடல்களைப் பாடி கிளாரினெட் வழியாக பாடல்களை வாசித்தார். திராவிடர் விடுதலைக் கழக மேடைகளில் புரட்சிகரப் பாடல்களை இசைக்கும் லதா, சத்யா, உமாபதி குழுவினரின் பெண்ணுரிமை, ஜாதி எதிர்ப்புப் பாடல்கள் நிகழ்ச்சிக்கு உணர்வூட்டின. கழகக் குடும்பத்தின் குழந்தைகள் பாடி, ஆடியதுடன் இணையர்களும் மேடையில் நடனமாடி மகிழ்ச்சிக் கடலில் மூழ்கச் செய்தனர். மாணவர் கழகத் தோழர் தோழியின் சிறப்பான நடன நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் உமாபதி தான் சிறையில் இருந்தபோது எழுதிய பாடலைப் பாடினார்.

விருதுநகர் மாவட்டம் காளையங்குறிச்சியைச் சேர்ந்த சரவணப்பிரியா-வைரம் இணையரின் ஜாதிமறுப்புத் திருமணம் சென்னையில் கழகத் தலைமை அலுவலகத்தில் நடந்தது. திருமணத்திற்குப் பிறகு பெண்ணின் பெற்றோர் பெண்ணைக் கடத்திச் சென்ற நிலையில் காவல்துறையில் புகார் செய்து பிரச்சினையில் தலையிட்டு கழகத் தோழர்கள் பெண்ணை மீட்டு வரச் செய்தனர். இந்தச் செய்தியை இணையர்கள் மேடைக்கு வந்து பகிர்ந்து கொண்டனர். திராவிடர் விடுதலைக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். திருமணம் செய்து வைத்து நெருக்கடியான நிலையில் தங்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டிய சென்னை மாவட்டக் கழகத் தோழர்களுக்கு உணர்வுப்பூர்வமாக நன்றி கூறினர்.

குடும்பஉறவுச் சிக்கல்களை சுமுகமாக எதிர்கொள்வது குறித்த ஆலோசனைகளை கழகக் குடும்பத்தைச் சேர்ந்த மனநல ஆலோசகர் அகத்தியா முன்வைத்தார். மயிலாப்பூர் கழகத் தோழர் அஸ்வின்-ஆனந்தி இணையர்களின் குழந்தைக்கு ‘ஆழி’ என்று கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பெயர் சூட்டினார்.

ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் சிவக்குமார், பிரபாகரன் மற்றும் குரோம்பேட்டை பாலா ஆகியோர் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். நிகழ்வின் இறுதியில் தோழர் லதா பாடிய பெண்விடுதலைப் பாடல் உணர்வலைகளைத் தட்டி எழுப்பியது.

நிறைவாக, கழகப் பொதுச் செயலாளர் பேசுகையில், பெரியார் குடும்பங்களில் வாழ்க்கை நெறிமுறைகளைப் பரிந்துரையாக முன்மொழிந்தார். அனைவரும் மகிழ்ச்சியுடன் அதை வரவேற்றனர். நிகழ்வுகளைத் தோழர்கள் பேரன்பு, புகழேந்தி ஒருங்கிணைத்தனர். இறுதியில் அசைவ உணவு விருந்து ‘சுய சேவை’ முறையில் வழங்கப்பட்டது.

பெரியார் குடும்பங்களின் வாழ்க்கை நெறிகளுக்கான பரிந்துரைகளாக சென்னை மாவட்டக் கழக சார்பில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்மொழிந்தார்.

1. குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுவதில் சமஸ்கிருதத்தைத் தவிர்க்க வேண்டும். முடிந்தால் ஆண், பெண் அடையாளங்களைத் தவிர்க்கலாம். உலக சிந்தனையாளர்கள் பெயர்களைத் தமிழில் இல்லை என்பதால் சூட்டாமல் இருக்க வேண்டாம்.

2. வீட்டில் வளரும் இளைய தலைமுறையினருக்கு நகைகள் அணியும் கலாச்சாரத்தைக் கைவிட முயற்சிக்க வேண்டும். இவர்கள் விரும்பும் ஆடைகளை உடுத்துவதற்குத் தடை போடக்கூடாது.

3. ஆண் பிள்ளைகளுக்கு சமையல் பயிற்சி வழங்க வேண்டும்.

4. குழந்தைகளின் முன்னெழுத்தில் (initial) தாயின் பெயரை இணைத்துக் கொள்ள வேண்டும்.

5. இளம் தலைமுறை “வாடா, போடா, வாடி, போடி, வாங்க, போங்க, வா, போ” என்ற மொழிகளை பயன்படுத்தும் போது இருவரும் சமமாக அதைப் பயன்படுத்த வேண்டும். இளம் தலைமுறையின் திருமணம் குறித்த முடிவுகளைத் தோழமையுடன் அணுக வேண்டும். கட்டாயப்படுத்துதலை முற்றாக தவிர்க்க வேண்டும்.

6. பெரியார் கொள்கைகளில் இருப்பவர்கள் காது குத்துதல், மொட்டை அடித்தல், குலதெய்வ வழிபாடு, இந்துப் பண்டிகைகளைக் கொண்டாடாமல் இருத்தலால் இவற்றிற்கான செலவுகளை மீதமாக்கி கொள்கிறார்கள். இந்தச் செலவுகளின் ஒரு பகுதியைக் கழக வளர்ச்சிக்கும், கொள்கைகளைப் பரப்புவதற்கும் செலவிட வேண்டும் என்ற உறுதியை ஏற்க வேண்டும்.

7. குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் உறவுகள் அடிப்படையில் தீர்மானிக்காமல் நண்பர்களாக தோழமையோடு பழகினால் உறவு அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து விடலாம். பெரியாரிய குடும்ப உறவுகள் அவசர உதவி தேவைப்படும் போதும், நெருக்கடிகள் உருவாகும் போதும் உதவிக்கரம் நீட்ட முன்வர வேண்டும். ஜாதி உறவுகள் வலிமையோடு நிற்பதே இந்த பரிமாற்ற உதவிகளில்தான்! இதற்கு மாற்றாக பெரியாரியல் குடும்ப வாழ்வியலை நாம் வளர்த்தெடுக்க வேண்டும்.

8. குடும்பங்களில் அரசியல் சமூக கருத்துக்களைப் பேச வேண்டும். சமூக வலைதளங்களைப் பெண்கள், பெண்ணுரிமை, பகுத்தறிவு கருத்துகளைப் பரப்புவதற்கு பயன்படுத்த வேண்டும்.

இந்தக் கருத்துகள் குடும்ப விழாவின் பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டன.

முன்னாள் நீதிபதி அதிர்ச்சி தகவல்

நீதிபதி நியமனங்களில் ஒன்றிய ஆட்சி தலையீடு

நீதிபதிகள் நியமனங்களில் ஒன்றிய ஆட்சி தலையிட்டு முடிவுகளை எடுத்ததாக ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி சஞ்சய் கிஷண் கவுல் வெளிப்படையாக குற்றம் சாட்டியுள்ளார். அண்மையில் அவர் எழுதி வெளிவந்துள்ள ‘*Without fear or favour*’ என்ற சுயசரிதை நூல் பெரும் புயலைக் கிளப்பியுள்ளது. ஜாதி,மதத்தின் பார்வையில் நீதிபதிகள் தேர்வு நடப்பதாக கவுல் குற்றம் சாட்டியிருக்கிறார். சுயசரிதையில் இடம் பெற்றுள்ள சில தகவல்கள்....

★ நீதிபதிகள் நியமனத்திற்கு அரசின் முன் ஒப்புதலைப் பெற முயற்சி

முன்னாள் தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட், கொலீஜியம் முறையாகக் கூடி ஒரு வேட்பாளரைப் பற்றி விவாதிப்பதற்கு முன்பே, அந்தப் பெயர் குறித்து மத்திய அரசின் கருத்தை அறிய முயன்றார். உச்சநீதிமன்றத்தில் காலியாக இருந்த ஆறு இடங்களை நிரப்புவது தொடர்பாக விவாதம் நடைபெற்றது. ஐந்து பெயர்கள் குறித்து ஏற்கெனவே ஒருமித்த கருத்து இருந்தது. ஆறாவது பெயரைச் சந்திரசூட் முன்மொழிந்தபோது, அரசின் கருத்தைத் தொலைபேசியில் கேட்டறியலாமா என்று தன்னிடம் கேட்டதாகக் கவுல் கூறுகிறார். அரசின் கருத்தைக் கேட்பதற்கு முன்பு, கொலீஜியம் சுதந்திரமாக விவாதித்து முடிவெடுக்க வேண்டும் என்று கவுல் எதிர்த்தார். நீதிபதிகளைத் தேர்வு செய்வதில் அரசின் விருப்பத்தை ஏன் கேட்க வேண்டும் என்று கவுல் கேட்டார்.

சிறுபான்மை மதத்தைச் சேர்ந்த ஒருவரை நீதிபதியாக நியமிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டபோது, ஏற்கெனவே பிற சிறுபான்மை மதங்களைச் சேர்ந்த நீதிபதிகள் இருக்கும்போது மேலும் ஒருவர் ஏன் தேவை என்ற கேள்வியை அரசு எழுப்பியது. வேட்பாளரின் மத அடையாளம் நியமன விவாதத்தில் முன்வைக்கப்பட்டது. இதுபோன்ற கேள்விகள் நீதிபதியின் தகுதி, திறமை மற்றும் நேர்மையை அடிப்படையாகக் கொண்ட தேர்வு நடைமுறைக்கு முரணானவை. வேட்பாளரின் பெயர் பொதுவெளியில் வெளியிடப்படவில்லை. எனவே, அந்த நபர் யார் என்று ஊகிப்பது சரியல்ல.

★ நீதிபதி வேட்பாளரின் குடும்ப ஜாதி குறித்து அரசு கேள்வி எழுப்பியது

அதே நியமன விவாதத்தில், வேட்பாளரின் குடும்பம் எந்த ஜாதியைச் சேர்ந்தது என்று அரசு கேட்டது. அந்தக் கேள்வியின் பொருத்தத்தைக் கவுல் எதிர்த்தார். ஒரே மதத்தைப் பல தலைமுறைகளாகப் பின்பற்றிவரும் ஒரு குடும்பத்தின் ஜாதியை இப்படிக் கேட்பதன் அவசியம் என்ன என்று அவர் கேள்வி எழுப்பியதாக நூலில் கூறப்படுகிறது.

இந்த விவகாரத்தால் அதிருப்தியடைந்த கவுல், கோப்பை மூடிவிட்டு கூட்டத்திலிருந்து வெளியேறியதாகக் கூறுகிறார். பின்னர் அரசு தனது எதிர்ப்பை விலக்கிக்கொண்டு அந்த நியமனத்தை ஏற்றுக்கொண்டதாகவும் அவர் தெரிவிக்கிறார்.

★ பணமோசடி தடுப்புச் சட்டம்

பணமோசடி தடுப்புச் சட்டம் (PMLA) தொடர்பான ஒரு வழக்கை மறுபரிசீலனை செய்வது குறித்து அவரது அமர்வு பரிசீலித்து வந்தபோது, அந்த வழக்கு வேறு நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு திடீரென மாற்றப்பட்டது. 2022-ஆம் ஆண்டு PMLA சட்டத்தின் சில அம்சங்களை உச்ச நீதிமன்றம் உறுதிசெய்திருந்தது. அந்தத் தீர்ப்பின் சில அம்சங்களை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமா என்பது தொடர்பாகக் கவுல் தலைமையிலான அமர்வு விசாரித்தது. பின்னர் அந்த வழக்கு வேறு அமர்வுக்கு மாற்றப்பட்டதாகவும், அதற்கான தெளிவான விளக்கம் தமக்குக் கிடைக்கவில்லை என்றும் கவுல் கூறுகிறார். தனது அமர்வு அந்த வழக்கில் கடுமையான அணுகுமுறையை மேற்கொள்ளக்கூடும் என்று கருதி வழக்கு மாற்றப்பட்டிருக்கலாம் என அவர் சந்தேகம் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 2-ம் பக்கத்தில்..

திராவிடர்களை அவமதிக்கும் ‘ராமலீலா’

நவராத்திரி பண்டிகையில் டெல்லியில் ராவணன் உருவத்தைத் தீ வைத்து எரித்துக் கொண்டாட்டம் போடுவது திராவிடர்களை அவமதிப்பது அல்லவா?

வேத காலங்களில் பிராமணர்களின் அட்டூழியங்களை எதிர்த்தவர்களை எல்லாம் அசுரர்கள் என்ற முத்திரை குத்தி அவர்களை அழிப்பதற்காக அவதாரம் எடுத்து வந்தவர்கள் எல்லாம் இப்போது கடவுளாக மாற்றப்பட்டு விட்டார்கள். இப்போது எரிப்புப் பட்டியலில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியையும் சேர்த்து இருக்கிறார்கள் என்ற செய்திகள் வருகின்றன. ராமராஜ்ய ஆட்சியைக் கேள்வி கேட்பதால் இவர்களையும் அரக்கர் பட்டியலில் சேர்த்து விட்டார்கள்.

பழங்குடி மக்களின் நிலங்களை அபகரித்து வேதங்களையும் யாகங்களையும் நடத்தி, உணவுப் பொருள்களையும் விவசாயக் கருவிகளான கால்நடைகளையும் நெருப்பில் போட்டு எரித்ததை எதிர்த்து கேள்வி கேட்டவர்களை அசுரர்கள் என்றார்கள்; அதாவது பிராமணர்கள் அன்று குடித்து வந்த டாஸ்மாக் சரக்கான ‘சுரா’ பானத்தைக் குடிக்காதவர்கள் அசுரர்கள் குடித்துக் கும்மாளம் போட்டவர்கள் சூரர்கள், அதாவது தேவர்கள். எப்படி இருக்கிறது கதை?

ராமாயண காலத்தில் இந்து மதமோ கோயில்களோ சடங்குகளோ இல்லை. பார்ப்பன மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் வர்ணாஸ்ரமம் மட்டுமே இருந்தது. அதைக் காப்பாற்றுவதற்காக ராமன் வந்தான் என்று ராமாயண கதைகளே கூறுகின்றன. வனவாசம் போவதற்கு முன் வேத பிராமணர்களை மட்டும் அழைத்து அவர்களுக்குச் செல்வங்களை வாரி வழங்குகிறான். இராமன் காட்டில் தன்னைச் சந்திக்க வந்த பரதனிடம் பிராமணர்கள் மனம் வருந்தாமல் நடந்துகொள் என்று எச்சரிக்கிறான். மீண்டும் ஆட்சிக்கு வந்து அரசனான பிறகு சூத்திரன், சம்பூகன் பிராமணர்களுக்கே உரிய தவத்தைச் செய்தான் என்பதற்காக பிராமணர்களின் முறையீடுகளை ஏற்று சம்பூகனுக்கு விசாரணை ஏதும் நடத்தாமலே மரண தண்டனை வழங்குகிறான். அவனது ஆட்சியின் முதல் சாதனையே இதுதான்!

வால்மீகியின் முதல் இராமாயணம் ராமனை கடவுளாகவே கூறவில்லை; சாதாரண மனிதன் என்றுதான் கூறுகிறது. இந்துத்துவவாதிகள் கொண்டாடும் விவேகானந்தரும், ராமன் ஒரு கடவுள் அல்ல என்ற கருத்தைத்தான் கூறியிருக்கிறார். பிற்காலத்தில் எழுதப்பட்ட ராமாயணங்கள்தான் ராமனை கடவுளாக உயர்த்தின. இராவணனை தெய்வமாகக் கொண்டாடும் மக்கள் இப்போதும் பல மாநிலங்களில் இருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்தவர்களோ, முஸ்லிம்களோ அல்ல! இராவணன் உருவத்தை எரிப்பது அவர்கள் மனதைப் புண்படுத்தாதா?

திராவிடர் இயக்கத் தலைவர்களான பெரியார், அண்ணா, கலைஞர் ராமாயணக் கதை என்பது ஆரிய திராவிடப் போராட்டம் என்று மக்களிடையே எடுத்துக் கூறி தன்மான உணர்வைத் தட்டி எழுப்பினார்கள். நேரு உள்ளிட்ட ஆய்வாளர்களும் இதே கருத்தை வெளிப்படுத்தினர். பார்ப்பனர்களின் தலைவர் ராஜாஜி ‘கல்கி’ வாரப் பத்திரிக்கையில் ‘சக்கரவர்த்தி திருமகன்’ என்ற தலைப்பில் ராமன் பெருமைகளைத் தொடராக எழுதியபோது கலைஞர் முரசொலியில் ‘மூக்காஜி’ என்ற பெயரில் ஒவ்வொரு வாரமும் அதற்கு பதிலடி தந்தார்.

1955 மார்ச்-*14*ஆம் தேதி தொடர்களாக இந்த மறுப்புக் கட்டுரைகள் வெளிவந்தன. அதில் வடநாட்டில் ராமலீலாக்கள் தொடர்ந்தால் தென்னாட்டில் ராமனை எரிக்கும் ராவணலீலாக்கள் நடக்கும் என்று எச்சரித்தார். *1974* ஆம் ஆண்டு பெரியாரின் முதலாம் ஆண்டு நினைவு நாளில் திராவிடர் கழகத் தலைவர் அன்னை மணியம்மையார் பெரியார் திடலில் ராவணலீலா நடத்தி ராமன், லட்சுமணன், சீதை உருவப் பொம்மைகளை எரித்து வடநாட்டுக்கும் பார்ப்பனர்களுக்கும் பதிலடி தந்தார். தொடர்ந்து பெரியார் திராவிடர் கழகம் மூன்று ஆண்டுகள் தமிழ்நாட்டில் பதிலடியாக ராவண லீலாக்களை நடத்தியது; தோழர்கள் கைதானார்கள்.

எதிரிகளை அழித்து ஒழிப்பது என்ற பயங்கரவாதத்தை கொண்டாடுகிறவர்கள் தான் ஜனநாயகப் போராளிகளை ‘அர்பன் நக்சல்கள்’ என்று தேசவிரோத முத்திரை குத்துகிறார்கள். சூழ்ச்சிகரமாக படுகொலை நடத்திய புராண பயங்கரவாதிகளை அவதாரங்கள் என்று புனிதப்படுத்துகிறார்கள். திராவிடர்களையும் இதைச் சிந்திக்க விடாமல் சிந்தனையில் திணித்து கொண்டாட வைத்திருப்பதுதான் பார்ப்பனியத்தின் உலக மகா சூழ்ச்சி!

– விடுதலை இராசேந்திரன்

தீண்டாமையை திணித்த ஆசிரியர்களை கைது செய்க

கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை

கோவையில் பீளமேடு பகுதியில் அமைந்துள்ளது அரசு உதவி பெறும் கே.கே.நாயுடு பள்ளி. அதில் பயிலும் 11ஆம் வகுப்பு மாணவர் அகிலன். இரண்டு மாதங்களுக்கு முன்பு பட்டியல் சமூகத்தினருக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகை பெறுவதற்காக வகுப்பறையில் பட்டியல் சமூக மாணவர்களை அழைத்த பொழுது அகிலன் தன் பெயரைப் பதிவு செய்துள்ளார். இதன் மூலம் அவர் பட்டியல் சமூகத்தவர் என்பதைத் தெரிந்து கொண்ட பள்ளி வகுப்பு ஆசிரியர் விஜயகுமார் மற்றும் சக மாணவர்கள் அவரை ஜாதி ரீதியாக இழிவுபடுத்திப் பேசியும் துன்புறுத்தியும் தனிமைப்படுத்தியும் ஜாதிய வன்கொடுமை செய்து அவருக்கு மன உளைச்சலை ஏற்படுத்தி உள்ளனர் என்று அறிகிறோம்.

மேலும் பட்டியல் சமூகத்து மாணவர்களை மாட்டுக்கறி தின்பவர்கள் என்று சக மாணவர்கள் மத்தியில் ஆசிரியர் விஜயகுமார் மாணவனை அவமானப்படுத்தி வந்திருக்கிறார். இவ்வாறு தான் ஜாதிரீதியாக வகுப்பு ஆசிரியர் மற்றும் சக மாணவர்களால் வன்கொடுமை செய்யப்படுவதைத் தலைமை ஆசிரியர் அருண்குமார் அவர்களிடம் மாணவன் அகிலன் நேரில் சென்று புகார் அளித்துள்ளார்.

ஆனாலும் இதையெல்லாம் கேட்டும் தலைமை ஆசிரியர் அருண்குமார் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் அவருக்கு சம்பந்தம் இல்லாமல் பதில்களைக் கூறி அனுப்பி விட்டதாக தன் வீட்டில் வந்து தன் பெற்றோரிடமும் சகோதரியிடமும் தெரிவித்து மிகுந்த மன உளைச்சலில் இருந்துள்ளார்.

இந்நிலையில் அக்.21, 2026 புதன்கிழமை மதியம் மாணவர் அகிலன் தன் வீட்டில், தூக்கு போட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார். இதற்குக் காரணம் அவரை ஜாதி ரீதியாக வன்கொடுமை செய்த வகுப்பு ஆசிரியர் விஜயகுமார் மற்றும் இரண்டு சக மாணவர்கள், இதனை நன்கு தெரிந்தும் நடவடிக்கை எடுக்காத தலைமையாசிரியர் அருண்குமார் ஆகியோரே இதற்கு முழு பொறுப்பும் ஆவார்கள்.

ஆகவே இவர்கள் அனைவர் மீதும் தீண்டாமை வன்கொடுமை சட்டப்பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்து, கைது செய்து இவர்களுக்குத் தக்க தண்டனை பெற்றுத் தரும் வகையில் தமிழ்நாடு அரசு விரைந்து இவ்வழக்கினை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

தீண்டாமை வன்கொடுமை இந்த அளவிற்கு பள்ளி மாணவர்களிடையே பரவி வருவது மிகவும் ஆபத்தான போக்காகும். கல்வி உதவித்தொகை பெறும் மாணவர்களைக் குறி வைத்து இப்படியான வன்கொடுமைகளில் ஈடுபடுவதை அனுமதிப்பதே அவர்களின் கல்விக்கு மிகப்பெரிய ஊறு விளைவிக்கும் செயலாகும்.

இந்த மாணவரின் இறப்புக்குக் காரணமானவர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனை தான் இது போன்ற மனநிலையில் இருக்கும் மற்ற ஆசிரியர்களுக்கும், தவறான வழிகாட்டுதலில் இருக்கும் மாணவர்களுக்கும் தக்க பாடமாக இருக்கும்.

மாணவரின் மரணத்திற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி கோவையில் போராட்டம் நடைபெற்று வருகிறது. திராவிடர் விடுதலைக் கழகம் போராடும் மக்களுடனும், அமைப்புகளுடனும் தொடர்ந்து மாணவனுக்கான நீதி கிடைக்கும் வரை களத்தில் நிற்கும்.

பெரியார் அறிவுலகத்துக்கு ‘ஆயுத பூஜை’ விடுமுறையாம்!

ஆயுத பூஜையைக் கொண்டாடுமாறு சுற்றறிக்கை விட்ட தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்திலும் அதை முறையாகப் பின்பற்றிக் காட்டியிருக்கிறது. தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் தலைமைச் செயலகத்தில் ஆயுத பூஜை போட்ட செய்தியை இதுவரை கேட்டதில்லை. புகை மூட்டத்தைத் தாங்க முடியாமல் அங்கே சென்சார் கருவியே எச்சரிக்கை மணி அடித்ததைத் தொலைக்காட்சிகளில் பார்த்தோம்! இதேபோல் தொழுகைகளையும் பிரார்த்தனைகளையும் நடத்தப் போகிறார்களா என்பதை இனிமேல்தான் பார்க்க வேண்டும். அதற்காக சில அமைச்சர்கள் ஆர்வத்துடன் காத்திருக்கிறார்கள்.

கோவையில் ‘பெரியார் அறிவுலகத்தை’ ஆயுத பூஜைக்காக இரண்டு நாட்கள் பூட்டுப் போட்டு விட்டார்கள். பண்டிகை கொண்டாட்ட ‘புனிதநாளில்’ பெரியார் அறிவுலகத்தைத் திறந்து வைப்பது இந்துக்களை புண்படுத்திவிடும் என்று அஞ்சுகிறார்களா? அல்லது ஆஸ்தான சோதிடர்கள் தந்த ஆலோசனையா? முதலமைச்சர் தலைமையிலான ‘மதச்சார்பற்ற’ கூட்டணித் தலைவர்களும் மவுனம் சாதிக்கிறார்கள்; ஆயுத பூஜையில் கலந்துவிட்டார்களா? அரசு நிறுவனங்களுக்கு காவி அடிப்பதுதான் மதச்சார்பின்மை என்ற மாற்றமா?

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தோழர் திருமாவளவன் ஆயுத பூஜை, அசோகர் காலத்து பவுத்த நெறி என்று பெண்கள் கருத்தரங்கில் பேசியிருக்கிறார். போரில் ரத்தம் சிந்த வேண்டாம் என்று முடிவு எடுத்த மன்னர் அசோகர் ஆயுதங்களைப் புறக்கணிக்க உருவாக்கியதுதான் ஆயுத பூஜை என்று விளக்கம் தருகிறார். இப்போது அதைக் கொண்டாடலாமா? வேண்டாமா? என்பது பற்றி எந்த விளக்கமும் தரவில்லை! ஆனால் புவுத்தம் தழுவிய அம்பேத்கர் எடுத்த உறுதிமொழிகளில் ஒன்று இந்து மதப் பண்டிகைகளைக் கொண்டாட வேண்டாம் என்பதாகும். தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே முதன்முதலாக பவுத்த நெறியை ஏற்று ஆயுத பூஜை கொண்டாடிய ஒரே முதல்வர் விஜய் அவர்கள்தான் என்று பேசாத வரை நமக்கு மகிழ்ச்சியே!

இப்போது நமக்கு ஒரு அச்சம் வந்துவிட்டது. ஜோதிடர்களின் ஆலோசனையை ஏற்று ‘பெரியார் அறிவுலகத்தை’ இந்து அறநிலையத் துறையின் கீழ் கொண்டுவந்துவிடுவார்களோ என்பதுதான் நமக்கு எழுந்துள்ள அச்சம்!

முதல் பக்க தொடர்ச்சி..

★ டி.ஒய். சந்திரசூட் அரசுக்கு அளவுக்கு அதிகமாக இணங்கியதாக விமர்சனம்

நீதிபதிகள் நியமனம் தொடர்பாக சந்திரசூட் மத்திய அரசிடம் தேவைக்கு அதிகமாக இணக்கமாக நடந்துகொண்டதாகக் கவுல் குற்றம்சாட்டுகிறார்.

★ கொலீஜியம் முறையில் அரசியல் அழுத்தம் ஏற்படுவதற்கான வாய்ப்பு

கொலீஜியம் முறை அரசியல் அதிகாரத்திலிருந்து முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்ட அமைப்பு அல்ல; அதில் அரசியல் அழுத்தங்கள் நுழைவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று அவர் கூறுகிறார். நீதிபதிகள் நியமனத்தில் அரசு தனது கருத்தைத் தெரிவிக்கிறது. அந்த ஆலோசனை, நீதிபதிகள் சுதந்திரமாக முடிவெடுப்பதற்கு முன்பே அரசின் ஒப்புதலைப் பெறும் நடைமுறையாக மாறக்கூடாது. கொலீஜியத்தின் முடிவெடுக்கும் நடைமுறை வெளிப்படையாகவும், அதன் செயல்பாடுகள் பொறுப்புணர்வுடன் கூடியதாகவும் இருக்க வேண்டும். அதாவது, கவுலின் விமர்சனம் மத்திய அரசை மட்டுமல்ல; கொலீஜியத்தின் செயல்பாட்டையும் உள்ளடக்கியது.

★ நீதிபதிகள் நியமன முறையைச் சீரமைக்க வேண்டிய அவசியம்

கொலீஜியம் முறை மட்டுமே எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வாகிவிடாது. அதன் செயல்பாட்டில் உள்ள வெளிப்படைத்தன்மைக் குறைபாடுகள் மற்றும் அரசியல் அழுத்தங்களை எதிர்கொள்ளும் திறன் ஆகியவை விவாதிக்கப்பட வேண்டும். இது ஒரு குறிப்பிட்ட நபர் செய்த தவறு என்ற குற்றச்சாட்டைத் தாண்டி, நீதிபதிகள் நியமன அமைப்பின் செயல்பாடு குறித்த விமர்சனமாகும்.

‘மனிதநேயம்’ காப்பதற்கே பெரியார் பார்ப்பனர்களை எதிர்த்தார்

குமாரபாளையம் கூட்டத்தில் கொளத்தூர் மணி பேச்சு (1)

செப்-29 அன்று குமாரபாளையத்தில் கழகம் நடத்திய பெரியார் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டத்தில் ‘பெரியாரின் போராட்டங்களும், மனித நேயமும்’ என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை....

இன்றைக்குத் தோழர்கள் ஒரு தலைப்பைக் கொடுத்து எனக்குச் சிக்கலை உண்டாக்கியிருக்கிறார்கள். வெறுமனே பெரியார் பிறந்தநாள் என்றால் நாம் பேசிக்கொண்டே போய்விடலாம். ஆனால், இப்போது ‘பெரியாரின் போராட்டங்களும் மனிதநேயமும்’ என்ற தலைப்போடு இணைத்து அறிவித்திருக்கிறார்கள். பெரியாரின் பிறந்தநாள் செப்டம்பர் 17 என்பது நமக்குத் தெரியும். அவருடைய 148ஆவது பிறந்தநாள் என்றும் அறிவித்திருக்கிறோம். ஆனால், விநாயகரின் பிறந்தநாள் பற்றிய எந்தத் தகவலும் இல்லை. அது எத்தனையாவது பிறந்தநாள் என்பதும் நமக்குத் தெரியாது. ஆனால், அதற்குக் காவல்துறை மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்கிறது.



வேடிக்கையாக எங்கள் தோழர் செல்வேந்திரன் அவர்கள் ஒன்று கூறுவார். அரசு அலுவலகங்களில் விநாயகரை முதலில் கொண்டுவந்து வைத்துவிடுவார்கள். அதுவும் காவல் நிலையத்திற்கு முன்னால் விநாயகர் இல்லாமல் இருக்க மாட்டார். சட்டம் கூடாது என்று சொன்னாலும் வைத்துவிடுவார்கள். ஏனென்றால்,

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்;
நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா.

அதாவது, நான் உனக்கு நான்கு பொருள்களைக் கொடுக்கிறேன். நீ எனக்கு மூன்றைச் செய்தால் போதும். அதை நினைவூட்டுவதற்காகத்தான் காவல் நிலையத்தில் பிள்ளையாரை வைத்திருக்கிறார்கள் என்று அவர் கூறுவார். காவல்துறையினர் யாரால், எதனால் அந்தப் பதவிக்கு வந்தார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது. தாங்களே படித்து, தங்களுடைய திறமையால் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டதாகப் பலர் கருதிக்கொண்டிருக்கிறார்கள். அது எப்படி நடந்தது என்பதை நாம் வகுப்புவாரி உரிமை, இடஒதுக்கீடு ஆகியவற்றிலிருந்து கருதிப் பார்க்க வேண்டும். இங்கே இருக்கிற ஒருவருக்குப் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டில் வாய்ப்புக் கிடைத்திருக்கலாம். மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டில் வாய்ப்புக் கிடைத்திருக்கலாம். பட்டியலினத்தைச் சேர்ந்த ஒருவருக்கு இடம் கிடைத்திருக்கலாம். ஆனால், தங்களுக்கென்று எந்தப் பலனையும் எதிர்பார்க்காமல், கிராமங்களில் வேளாண்மையிலும் பிற தொழில்களிலும் உழன்று கொண்டிருக்கிற மக்களை எண்ணித்தான் உங்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கிறது.

> **ஒவ்வொருவரும் தங்களுடைய மத நம்பிக்கைக்கும் தேவைக்கும் ஏற்ப விடுமுறை எடுத்துக்கொள்ளட்டும் என்றார் பெரியார்.**

இடஒதுக்கீடு என்பது சாதாரணமான ஒன்றல்ல. பட்டியலினத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஓர் இடம் கிடைக்கிறது என்றால், எங்கோ ஒரு கிராமத்தில் தலைக்கு எண்ணெய்கூடப் பூசாமல், வெயிலில் சட்டைகூட இல்லாமல் அலைந்து கொண்டிருக்கிற ஒவ்வொருவருடைய தலையையும் எண்ணித்தான் அந்த இடம் கிடைக்கிறது. அப்படிப்பட்ட மக்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் உங்களுக்கு இடம் கிடைக்கிறது. அதன் மூலமாகத்தான் பதவிகளுக்கு வருகிறார்கள். அந்தப் பதவிகளுக்குத் தேவையான கல்வியையும் பெறுகிறார்கள்.

ஆனால், அதையெல்லாம் அவர்கள் உணர்ந்திருக்கிறார்களா? காவல்துறையில் இருப்பவர்களில் பாதிப் பேர் இந்துத்துவவாதிகளாக மாறிவிட்டார்கள்; பலர் ஜாதியவாதிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் பெரியார் இயக்கத்தைப் பார்த்தால் பிடிக்காதுதான்! மதவாதிகளுக்குப் பிடிக்காது; ஜாதிவாதிகளுக்கு அதைவிடப் பிடிக்காது. ஏனென்றால், ஜாதி இல்லை என்று சொல்லுகிறவன் அவர்களுக்குப் பிடிக்காதவன். ‘நான் எவ்வளவு பெரிய ஜாதி! கோயிலுக்குப் போனால் என்னுடைய ஜாதியின் பெருமை தெரியும்!’ என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

பெரியாரைப் பொறுத்தவரை, அவருடைய கொள்கையைப் பற்றி ஒருமுறை அவரிடம் கேள்வி கேட்கிறார்கள். ‘நீங்கள் ஏன் இவ்வளவு கடுமையாகப் பார்ப்பன எதிர்ப்பைப் பேசுகிறீர்கள்?’ என்று ஓர் ஆங்கில ஏட்டைச் சேர்ந்தவர் கேட்கிறார். ‘*Why Are you so anti-Brahmin?*’ என்று கேட்கிறார். அதற்குப் பெரியார், ‘நான் வேறொன்றுமில்லை. நான் *Pro-Human*’ என்று பதிலளிக்கிறார். அதாவது, ‘நான் மனிதகுலத்தின் ஆதரவாளன். மனிதகுலத்திற்கு ஆதரவாளனாக இருப்பதால்தான் பார்ப்பனியத்தை எதிர்க்க வேண்டியிருக்கிறது’ என்பதுதான் அவர் கூறிய கருத்து. தன்னுடைய கொள்கையைச் சுருக்கமாகப் பெரியாரே ஒரு தலையங்கத்தில் எழுதியிருக்கிறார். ‘எனக்கு மனிதாபிமானம் வளர்ச்சித் திசையில் அபிமானம்தான் முக்கியம்’ என்று கூறுகிறார். மனிதாபிமானம் மட்டும் இருந்தால் போதாது; வளர்ச்சியை நோக்கிய மனிதாபிமானம் வேண்டும். அதாவது, மனிதநேயத்தையும் காலத்திற்கேற்ப மனித சமூகம் அடைய வேண்டிய வளர்ச்சியையும் இணைத்துத்தான் பெரியார் சிந்தித்தார். அவருடைய ஒவ்வொரு செயல்பாட்டிலும் அது வெளிப்பட்டிருக்கிறது என்பது பலருக்குத் தெரியாது. பெரியார் என்றால் கடுமையான மனிதர் என்று மட்டும்தான் பலருக்குத் தெரியும். ஏனென்றால், நம்முடைய எதிரிகள் அவரை அப்படித்தான் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். ஒவ்வொரு தலைவரையும் தங்களுக்கு விருப்பமான வகையில்தான் எதிரிகள் அறிமுகப்படுத்துகிறார்கள்.

அம்பேத்கரை அவமதிப்பவர்கள்

அம்பேத்கரை எடுத்துக்கொள்வோம். ‘அவர் சேரி மக்களுக்கான தலைவர்’ என்று மட்டும்தான் அறிமுகப்படுத்துவார்கள். அம்பேத்கர் என்ற பெயரைக் கேட்டாலே ஒருவித அருவருப்பு ஏற்பட வேண்டும் என்பதற்காக அப்படிச் செய்கிறார்கள். ஆனால், அம்பேத்கர் ஆற்றிய பணிகள் அவர்களுக்குத் தெரியாது. அம்பேத்கர் வைஸ்ராய் கவுன்சிலில் உறுப்பினராக இருந்தார். அது இன்றைய ஒன்றிய அரசின் அமைச்சர் பதவிக்கு இணையான பொறுப்பு. அவருக்குத் தொழிலாளர் துறை வழங்கப்பட்டது. கட்டுமானம் உள்ளிட்ட சில துறைகளும் அவருடைய பொறுப்பில் இருந்தன. பெண்களுக்கு மகப்பேறு காலத்தில் சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்குவதற்கான சட்டத்தைக் கொண்டு வந்தவர் அம்பேத்கர்.

நீங்கள் எண்ணிப் பாருங்கள். அவர் அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த காலத்தில் எத்தனை பட்டியலினப் பெண்கள் அரசுப் பதவிகளில் இருந்தார்கள்? எத்தனை பிற்படுத்தப்பட்ட பெண்கள் பதவிகளில் இருந்தார்கள்? பெரும்பாலும் பார்ப்பனப் பெண்கள்தான் பதவிகளில் இருந்தார்கள். அப்போது மகப்பேற்றுக்காக விடுப்பு எடுக்க வேண்டுமென்றால், பணியிலிருந்து விலகித்தான் செல்ல வேண்டியிருந்தது. குழந்தை பிறப்பும் வளர்ப்பும் முடிந்த பிறகு மீண்டும் பணிக்கு வந்தால், புதிதாகப் பணியில் சேர்வதைப் போன்ற நிலைதான் இருந்தது.

ஆனால், மகப்பேறு விடுப்புக் காலத்தையும் தொடர்ச்சியான பணிக்காலமாகக் கணக்கிட வேண்டும்; அந்தக் காலத்திற்குச் சம்பளமும் வழங்கப்பட வேண்டும் என்ற உரிமையைக் கொண்டுவந்தவர் அம்பேத்கர். தங்களுடைய சமூகத்தின் இழிநிலைக்குக் காரணமாக இருப்பவர்களாகக் கருதப்பட்ட பார்ப்பன சமூகத்தைச் சேர்ந்த பெண்களாக இருந்தாலும், அவர்களைப் பெண்களாகவே கருதி அவர்களுடைய உரிமைக்காகச் செயல்பட்டார். வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு, தொழிலாளர் நலச் சட்டங்கள் போன்றவற்றிலும் அவர் முக்கியப் பங்காற்றினார். எட்டு மணி நேர வேலை என்பது அப்போது இந்தியாவில் நடைமுறையில் இல்லை. அதற்கான போராட்டம் புதுச்சேரியில் நடந்தது. ஆனால், எட்டு மணி நேர வேலைக்கான சட்ட ஏற்பாட்டை அம்பேத்கர் கொண்டுவந்தார். இதையெல்லாம் அவர்கள் கருதிப் பார்ப்பதில்லை.

ஒரு தலைவரைப் பற்றி மக்களிடம் எதைச் சொன்னால் அருவருப்பு ஏற்படுமோ, எதைச் சொன்னால் எதிர்ப்புணர்வு உருவாகுமோ, அதை மட்டுமே எடுத்துக்கூறி எதிரிகள் அறிமுகப்படுத்துகிறார்கள். பெரியாரையும் அப்படித்தான் அறிமுகப்படுத்துகிறார்கள். ‘பெரியாரா? அவர் கடவுள் மறுப்பாளர். சாமி இல்லை என்று சொன்னவர்!’ என்கிறார்கள். இதைச் சொல்பவர்கள் ஏதோ கடவுளுக்கு மிகவும் நெருக்கமான உறவினர்களைப் போலவும், அன்றாடம் கடவுளிடமிருந்து பலன்களைப் பெற்றுக் கொண்டிருப்பவர்களைப் போலவும் நடந்துகொள்கிறார்கள்.

பெரியாரும் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்தான். ஆனால், அவர் தன்னுடைய மாநாடுகளில் இரண்டு, மூன்று முறை முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார். 1931ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டில் ஒருமுறை, 1944ஆம் ஆண்டு திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றப்பட்டபோது ஒருமுறை, அண்ணாவுக்குப் பெட்டிச் சாவியைக் கொடுப்பதாக அறிவித்த சிறப்பு மாநாட்டில் ஒருமுறை என மூன்று முறை தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அந்தத் தீர்மானங்கள் எதைப் பற்றியவை? அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் மத விடுமுறைகளைப் பற்றியவை. பெரியார் அரசு ஊழியர்களைப் பற்றி மட்டுமல்லாமல், அரசு அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்களையும் கருத்தில் கொண்டார். அரசு ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கப்படுகிறது. கோகுலாஷ்டமிக்கு விடுமுறை வழங்குகிறார்கள். ஆவணி அவிட்டத்திற்கு விடுமுறை வழங்குகிறார்கள். பூணூல் மாற்றுவதற்காக விடுமுறை வழங்குகிறார்கள். எத்தனை பேர் பூணூல் அணிந்திருக்கிறார்கள்? இப்போது நம்முடைய ஆட்களில்கூடப் பலர் பூணூல் அணிந்துகொண்டு, ‘எங்களுடைய பூணூல் மிகவும் சக்தி வாய்ந்தது’ என்று சொல்லிக்கொள்கிறார்கள். நான் அடிக்கடி வேடிக்கையாகச் சொல்வேன். நம்முடைய பூணூலால் எந்தப் பயனும் கிடையாது. சாவி தொலைந்துவிடாமல் இருப்பதற்காக அதில் தொங்கவிட்டுக் கொள்ளலாம். குளிக்கும்போது முதுகைத் தேய்த்துக் கொள்ளலாம். இந்த இரண்டு பயன்பாடுகள்தான் நம்முடைய பூணூலுக்கு இருக்கின்றன. ஆனால், பார்ப்பனருடைய பூணூல் அப்படிப்பட்டதல்ல. அது அவருக்குத் தகுதியையும் அருகதையையும் வழங்குவதாகக் கருதப்படுகிறது. பார்ப்பனர்கள் மக்கள் தொகையில் எத்தனை விழுக்காடு இருக்கிறார்கள்? மூன்று விழுக்காடு. அதில் ஆண்கள் எத்தனை பேர்? ஒன்றரை விழுக்காடு. அவர்களிலும் பூணூல் அணியும் வயதுடையவர்கள் முக்கால் விழுக்காடுதான் இருப்பார்கள். அந்த முக்கால் விழுக்காட்டினர் பூணூல் மாற்றிக் கொள்வதற்காக மீதமுள்ள 99.25 விழுக்காட்டு மக்களுக்கும் ஏன் விடுமுறை அளிக்க வேண்டும் என்று பெரியார் கேட்டார்.

விவரம் தெரியாத பாமர மக்கள் எங்கோ தொலைதூரக் கிராமத்திலிருந்து அரசு அலுவலகத்திற்கு நடந்தே வருவார்கள். அவர்களுக்குப் பூணூல் மாற்றும் நிகழ்ச்சி பற்றியெல்லாம் தெரியாது. தங்களுடைய வேலையை முடித்துக் கொள்வதற்காக வருவார்கள். ஆனால், அரசு அலுவலகம் விடுமுறை என்பதால் ஏமாற்றத்தோடு திரும்பிச் செல்ல வேண்டியிருக்கும். ஏன் அப்படிப்பட்ட விடுமுறைகளை வழங்க வேண்டும் என்று பெரியார் கேட்டார்.

கோகுலாஷ்டமிக்கு விடுமுறை வழங்குகிறீர்கள். சரி, அதை வைத்துக்கொள்வோம். எங்களுடைய ஊரில் கருப்புசாமிக்குப் பொங்கல் வைக்கிறோம். கிடா வெட்டுகிறோம், எருமை வெட்டுகிறோம் ஏதோ ஒரு வகையில் எங்களுடைய வழிபாட்டை நடத்துகிறோம். மாரியம்மனுக்குத் திருவிழா எடுக்கிறோம். அதற்கெல்லாம் பார்ப்பனர்களையும் சேர்த்து விடுமுறை அளிப்பார்களா? அவர்களுக்கு அந்த விடுமுறை எதற்குத் தேவை? எனவே, பெரியார் ஒரு கருத்தை முன்வைத்தார். அரசு விடுமுறை நாட்களிலிருந்து மதம் சம்பந்தப்பட்ட விடுமுறைகளை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பத்து நாட்களைச் சிறுவிடுப்பாகச் சேர்த்துக் கொடுத்துவிடுங்கள் என்றார். ஒவ்வொருவரும் தங்களுடைய மத நம்பிக்கைக்கும் தேவைக்கும் ஏற்ப விடுமுறை எடுத்துக்கொள்ளட்டும் என்பதுதான் அவருடைய கருத்து.

நாங்கள் எங்களுடைய காளியம்மன் கோயிலுக்குப் போவோம். வேறு ஏதாவது கோயிலுக்குப் போவோம். எங்களுடைய தேவைகளுக்காக விடுமுறை எடுத்துக்கொள்வோம். அவர்கள் தங்களுடைய தேவைகளுக்காக விடுமுறை எடுத்துக்கொள்ளட்டும். ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவையான நாட்களில் விடுமுறை எடுத்துக்கொண்டால், அரசு அலுவலகங்கள் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கும் என்று பெரியார் கூறினார்.

பார்ப்பனர் பூணூல் மாற்றுவதற்காக விடுமுறை எடுத்துக்கொண்டால், மற்றவர்கள் வேலை செய்யலாம். நம்முடையவர்கள் மாரியம்மன் கோயிலுக்கோ வேறு கோயிலுக்கோ போகும்போது அவர்கள் வேலை செய்யலாம். இவ்வாறு ஒவ்வொருவரும் தங்களுடைய தேவைக்கேற்ப விடுமுறை எடுத்துக்கொள்ளலாம் என்பதுதான் பெரியாரின் கருத்து.இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குப் பெரியார் கூறிய மற்றொரு காரணமும் இருக்கிறது.ஞாயிற்றுக்கிழமை ஏன் விடுமுறை அளிக்க வேண்டும் என்று அவர் கேட்டார். ஒவ்வொரு மதத்தினருக்கும் ஒவ்வொரு நாள் புனித நாளாக இருக்கலாம். இஸ்லாமியர்களுக்கு வெள்ளிக்கிழமை முக்கியமான நாளாக இருக்கலாம். சில இந்துக்களுக்குச் சனிக்கிழமை முக்கியமான நாளாக இருக்கலாம். கிறிஸ்தவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை முக்கியமான நாளாக இருக்கிறது. யூதர்களுக்கும் அவர்களுடைய மத வழக்கப்படி ஒரு நாள் முக்கியமானதாக இருக்கிறது. அப்படியிருக்கும்போது, ஞாயிற்றுக்கிழமையை மட்டும் ஏன் பொதுவான விடுமுறை நாளாக அறிவிக்க வேண்டும்?

அதற்குப் பதிலாக, ஒவ்வொரு மாதமும் 7, 14, 21, 28 ஆகிய தேதிகளை விடுமுறை நாட்களாக அறிவித்துவிடுங்கள் என்றார். அந்தத் தேதிகள் எந்தக் கிழமையில் வந்தாலும் பரவாயில்லை. அந்த நாட்கள் வார விடுமுறை நாட்களாக இருக்கட்டும். இதில் என்ன பிரச்சினை இருக்கிறது? இது ஏதோ ஒரு புதிய கண்டுபிடிப்பு என்பதற்காக அவர் இதைக் கூறவில்லை. ஒவ்வொருவருடைய உணர்வுகளுக்கும் மரியாதை கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் கூறினார். ஒருவர் நாத்திகராக இருக்கலாம். மற்றொருவர் ஆத்திகராக இருக்கலாம். ஒவ்வொருவருடைய நம்பிக்கைக்கும் உணர்வுக்கும் உரிய மரியாதை அளிக்கப்பட வேண்டும். இதுதான் பெரியாருடைய மனிதநேயம்.

தொடர்ச்சி 4ம் பக்கத்தில்

கழகத் தலைவர் பங்கேற்ற நிகழ்ச்சிகள்

தோழர் செங்குட்டுவன் நினைவேந்தல்

பெரியாரின் பெருந்தொண்டர், முற்போக்கு எழுத்தாளர், ஆசிரியர் தோழர் செங்குட்டுவன் (எ) பூவராகன் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி செங்குட்டுவன் குடும்பத்தினர் மற்றும் தோழமை இயக்கத் தோழர்களின் சார்பாக அக்.24,2026 காலை 10.00 மணியளவில் கோவை இரயில் நிலையம் எதிரில் உள்ள திவ்யயோதயா ஹாலில் நடைபெற்றது.

வாலாசா வல்லவன் (மா.பெ.பொ.க துணை பொதுச்செயலாளர்) தலைமை வகித்து நினைவேந்தல் உரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி தோழர் செங்குட்டுவன் படத்தை திறந்து வைத்தார். அவர் பேசுகையில் செங்குட்டுவன் மதம் மனிதனை முட்டாளாக்குவதைக் குறித்தும், அறிவியலால் மக்கள் முன்னேற்றமடைந்ததைப் பற்றியும் கட்டுரைகள் மூலம் எடுத்துரைத்தவர் மறைந்த செங்குட்டுவன் என்று குறிப்பிட்டார்.

வந்தியத்தேவன் (ம.தி.மு.க தலைமைக் கழகச் செயலாளர்), வாழப்பாடி சுகுமார், ஆறுச்சாமி (த.பெ.தி.க அமைப்புச் செயலாளர்), ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர். செங்குட்டுவன் அவர்களின் மருமகளான முனைவர் சுல்தானா பேசுகையில், செங்குட்டுவன் அவர்களால் பெரியாரின் சிந்தனைகளில் ஈர்க்கப்பட்டு தன்னை முஸ்லீம் மதத்திலிருந்து விடுவித்துக் கொண்டு நாத்திகச் சிந்தனைவாதியாக மாற்றிக் கொண்டது குறித்து விளக்கினார். பெர்ட்ரண்ட் ரஸல் நன்றி கூறினார். நிர்மல்குமார் (கோவை மாநகரத் தலைவர்) இந்நிகழ்வை நடத்துவதற்கு உறுதுணையாக இருந்தார். கோவை மாவட்டக் கழகத் தோழர்களான பன்னீர்செல்வம் (மாவட்டச் செயலாளர்), வெங்கட் (மாநகரச் செயலாளர்), கிருஷ்ணன் கதிரவன், சதீஷ், லோகு, ராஜலட்சுமி, அறிவுக்கனல் ஆகியோர் பங்கேற்றனர்.

வனவாசி தோழர் சுகுமார் மறைவுக்கு இரங்கல்

வனவாசி கழகப் பொருளாளர் பன்னீர்செல்வம் அவர்களின் அண்ணன் சுகுமார் 20.10.2026 இரவு மறைந்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி 21.10.2026 அன்று மறைந்த தோழரின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். உடன் கழகத் தோழர்கள் சேலம் மாவட்டப் பொருளாளர் சம்பத், மாவட்ட அமைப்பாளர் அன்பு, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், வனவாசி நகரச் செயலாளர் உமாசங்கர், வனவாசி நகரத் தலைவர் செந்தில்குமார், நங்கவள்ளி நகரச் செயலாளர் சந்திரசேகர், விஸ்வநாதன், குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

ஜாதிப் பாகுபாட்டுக்கு பலியான மாணவர் அகிலன்; நடவடிக்கை எடுக்கக் கோரி தொடர் போராட்டம்

கோவை கே. கே. நாயுடு பள்ளியில் 11ஆம் வகுப்பு பயின்ற மாணவர் அகிலன் பள்ளியில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் நிகழ்த்தப்பட்ட ஜாதிய வன்கொடுமை காரணமாக 21.10.2026 அன்று தற்கொலை செய்து கொண்டார். அதற்குக் காரணமான வகுப்பு ஆசிரியர் விஜயகுமார், தலைமையாசிரியர் அருண்குமார் மற்றும் இரண்டு சக மாணவர்கள் ஆகியோரில் இரண்டு சக மாணவர்களை மட்டும் காவல்துறை கைது செய்துள்ளது.

மாணவன் அகிலன் தற்கொலைக்குக் காரணமான வகுப்பாசிரியர் விஜயகுமாரையும், அவர் மீது புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்காத பள்ளித் தலைமையாசிரியர் அருண்குமார் ஆகியோரைக் கைது செய்யக் கோரி மூன்றாவது நாளாக 24.10.2026 அன்று நடைபெற்று வரும் தொடர் காத்திருப்பு போராட்டம் அனைத்து முற்போக்கு இயக்கங்களின் கூட்டமைப்பின் சார்பாக கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் அருகில் நடைபெற்றது. காத்திருப்பு போராட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்று மாணவன் அகிலனின் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார். அதியமான் (ஆதித்தமிழர் பேரவையின் நிறுவனர், தலைவர்), நாகை திருவள்ளுவன் (தலைவர், தமிழ்ப் புலிகள் கட்சி), ஜக்கையன் (தலைவர், ஆதித்தமிழர் கட்சி), வெண்மணி (தலைவர், திராவிட தமிழர் கட்சி), மற்றும் முற்போக்கு இயக்கங்களின் கூட்டமைப்பினர் பலர் கலந்துகொண்டனர்.

கோவை மாவட்டக் கழகத் தோழர்களான பன்னீர்செல்வம் (மாவட்டச் செயலாளர்), நிர்மல் (மாநகரத் தலைவர்), வெங்கட் (மாநகரச் செயலாளர்), நவீன் (மாநகர அமைப்பாளர்), கிருஷ்ணன் கதிரவன், சதீஷ், லோகு, ராஜலட்சுமி, அறிவுகனல் ஆகியோர் பங்கேற்றனர்.

தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் தோழர் கோவை கு.இராமகிருஷ்ணன் அவர்களை அவரது இல்லத்தில் அக்-24 அன்று நேரில் சென்று நலம் விசாரித்தார் கழகத் தலைவர் கொளத்தூர் மணி. சூலூர் பன்னீர் செல்வம் (கோவை மாவட்டச் செயலாளர்), நிர்மல் குமார் (மாநகரச் செயலாளர்), நவீன்(மாநகர அமைப்பாளர்), முத்து (திருப்பூர் மாநகர அமைப்பாளர்), குணா, கிருஷ்ணன், கதிரவன், சதீஷ், லோகு, ராஜலட்சுமி, அறிவுக்கனல் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

"ஞானேஷ் புரோ; நீ காலி புரோ"

வாக்காளர் சிறப்புத் தீவிரச் சீர்திருத்தச் சட்டத்துக்கு (SIR) எதிராக ஞானேஷ்குமார் பதவி விலகக் கோரி, வாக்குரிமை கூட்டியக்கம் நடத்திய 'ஞானேஷ் புரோ நீ காலி புரோ' என்ற முழக்கத்துடன் கவன ஈர்ப்புக் கூடுகை, அக்.24,2026 அன்று கீழ்ப்பாக்கம் உழைக்கும் மக்கள் தொழிற்சங்க மாமன்றத்தில் நடைபெற்றது.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், முன்னாள் அமைச்சர் மனோ தங்கராஜ், வழக்கறிஞர் அருள்மொழி (திக), தியாகு, ஆர்.கீதா (பெண்ணுரிமை இயக்கம்) உள்ளிட்ட பலர் தோழமை இயக்கங்கள் தங்களது கண்டனங்களைத் தெரிவித்தனர். செல்வி (மனிதி) ஒருங்கிணைத்தார். தொடர்ந்து அக்.25,26 ஆகிய 3 நாட்கள் தொடர் கூடுகை போராட்டம் நடைபெற்றது.

தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப.அருண், தமிழ்நாடு மாணவர் கழக சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பேரன்பு மற்றும் தோழர்கள் ஷர்மிளா, குமார், அசோக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நங்கவள்ளி ஒன்றியக் கழக கலந்துரையாடல்

அக்.20, 2026 செவ்வாய், நங்கவள்ளி கணக்குப்பட்டி சிவகுமார் இல்லத்தில் ஒன்றியக் கலந்துரையாடல் நடைபெற்றது. கூட்டத்திற்கு நங்கவள்ளி ஒன்றியச் செயலாளர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். சேலம் மாவட்ட அமைப்பாளர் அன்பு, சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

எதிர்வரும் தந்தை பெரியார் நினைவு நாளையொட்டி நங்கவள்ளி, வனவாசி பகுதிகளில் பொதுக்கூட்டம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. மறைந்த தோழர் இலக்கம்பட்டி குமார் அவர்களுக்கு நங்கவள்ளி ஒன்றியக் கிளைக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

இறுதியாக, சிவகுமார் நன்றி கூறக் கலந்துரையாடல் கூட்டம் நிறைவு பெற்றது. வனவாசி நகரத் தலைவர் செந்தில், வனவாசி நகரச் செயலாளர் உமாசங்கர், நங்கவள்ளி நகரச் செயலாளர் சந்திரசேகரன், நா.குமார், வனவாசி நகரப் பொருளாளர் பன்னீர்செல்வம், சிவகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

3ம் பக்க தொடர்ச்சி..

சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் எவ்வளவு பெரிய சண்டை இருந்தது என்பது நமக்குத் தெரியும். 'பொன்னியின் செல்வன்' நாவலை உங்களில் பலர் படித்திருப்பீர்கள். அந்தத் திரைப்படம் வெளிவந்தபோதும் பலர் அந்த நாவலைப் படித்திருப்பார்கள்.அந்த நாவலில் கல்கி ஒரு நிகழ்வை எழுதியிருப்பார். ஒரு சைவன் நடந்து சென்றுகொண்டிருப்பான். அப்போது பெருமாள் கோயிலிலிருந்து ஒரு கல் பெயர்ந்து விழுந்து, அவனுடைய மூக்கில் அடிபட்டு, மூக்கு உடைந்து இரத்தம் வரும். ஆனால், அந்தச் சைவன் அதற்காக வருத்தப்படமாட்டான். பெருமாள் கோயிலிலிருந்து கல் பெயர்ந்து விழுந்ததை நினைத்து மகிழ்ச்சியடைவான். பெருமாள் கோயிலை இடிக்கின்ற காக்கையே, நீ வாழ்க என்று கூறும் அளவுக்குச் சைவத்திற்கும் வைணவத்திற்கும் பகைமை இருந்ததாகக் கல்கி அந்தக் கதையில் எழுதியிருப்பார். இப்போதும் அதைப் பார்க்கலாம். ஒரே நாமத்தைப் போட்டுக்கொள்பவர்களுக்குள்ளேயே எவ்வளவு சண்டை நடக்கிறது!வடகலை நாமம், தென்கலை நாமம் தொடர்பாக அந்தக் காலத்திலிருந்தே வழக்குகள் நடந்துகொண்டிருக்கின்றன.

காஞ்சிபுரம் கோயிலில் எந்த நாமத்தைப் போடுவது என்பது தொடர்பாக ஒரு வழக்கு நடைபெற்றது.அந்த வழக்கை விசாரித்த ஆங்கிலேய நீதிபதிக்கு இந்த நாமங்களைப் பற்றி என்ன தெரியும்? அவர், *"It is a dispute between U mark and Y mark"* என்று கூறினார்.அதாவது, 'U' வடிவத்தில் நாமம் போட்டால் அது வடகலை நாமம். 'Y' வடிவத்தில், கீழே ஒரு கோட்டுடன் போட்டால் அது தென்கலை நாமம். 'இதென்ன U வடிவத்திற்கும் Y வடிவத்திற்கும் இடையிலான சண்டையா? இதற்காகவா இவ்வளவு பெரிய பிரச்சினை?' என்று அந்த நீதிபதி கேட்டார்.

இன்றைக்கும் ஆண்டுதோறும் இந்தச் சண்டைகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. தொலைக்காட்சிகளிலும் அவற்றைக் காட்டுகிறார்கள். இரண்டு வகையான நாமங்களைப் போட்டுக்கொண்டிருப்பவர்களும் ஒருவரையொருவர் அடித்துக்கொள்கிறார்கள். அவர்கள் பேசுகின்ற வார்த்தைகளைப் பார்த்தால், தெருவில் சண்டையிடுபவர்கள்கூட அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசமாட்டார்கள். அந்த அளவுக்குக் கடுமையான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட நிலையில், அவர்களுடைய மத விழாக்களுக்காக எங்களுக்கு எதற்கு விடுமுறை?

தொடரும்...

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : October 29, 2026

Owned and Published By : K. Rajendran (Editor), From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.

Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776